திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : கனம் உறுப்பினர் அவர்கள் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் ஆட்சிக்கத்தில் மேற்படி திட்டம் நிறுத்தப்பட்டது என்று சொன்னார்கள். அதற்கு ஆதாரம் உண்டா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களைத்தான் கேட்க வேண்டும்.

கோழிப்போர்விளைக்குப் பாசன வசதி.

* 34 வினா—திரு. எ. சுவாமிதாஸ் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில், திருவிதாங்கோடு சானலின் கிளை கால்வாயான கோடியூர் கால்வாயில் இருந்து கோழிப்போர் விளைக்கு அருகாமையில் ஒரு புதிய வாய்க்கால் வெட்டி சுமார் நாற்பது ஏக்கரா நிலத்திற்கு பாசன வசதி செய்து கொடுப்பதற்காக நில ஆர்ஜிதம் செய்யவும் கால்வாய் வெட்டவும் திட்டமிட்டு மதிப்பீடு தயார் செய்து, அரசு ஒப்புதலுக்காக பல வருடங்களுக்கு முன்னரே அனுப்பப்பட்டதே அதற்கு அரசு நல்கிவிட்டதா ? இல்லையெனில் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நிதி பற்றாக் குறையின் காரணமாக திருவிதாங்கோடு கால்வாயின் 29 ஆம் எண் மதகின்கீழ் உள்ள நிலங்களுக்கு பாசனத்திற்கான வாய்க்கால்களை அமைக்கும் திட்டம் இதுவரை எடுத்துக்கொள்ளப் படவில்லை.

மக்கள் தொடர்பு அதிகாரிகள்.

* 28. வினா—திரு. என். கிட்டப்பா :

திரு. என். இராமச்சந்திரன் :

திரு. துரை முருகன் : மாண்புமிகு செய்தி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—